

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

ஐந்தாம்பத்து

---

3-ஆம் திருமொழி - துக்கச்சுழலையை

_______*________

* துக்கச்சுழலையைச்சூழ்ந்துகிடந்த வலையைஅறப்பறித்து *
புக்கினில்புக்குன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்டே?
மக்களறுவரைக்கல்லிடைமோத இழந்தவள்தன்வயிற்றில் *
சிக்கெனவந்துபிறந்துநின்றாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்! (1)

வளைத்துவைத்தேன்இனிப்போகலொட்டேன் உந்தனிந்திரஞாலங்களால் *
ஒளித்திடில்நின்திருவாணைகண்டாய் நீஒருவர்க்கும்மெய்யனல்லை *
அளித்தெங்கும்நாடும்நகரமும் தம்முடைத்தீவினைதீர்க்கலுற்றி *
தெளித்துவலஞ்செய்யும்தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய்! (2)

* உனக்குப்பணிசெய்திருக்கும்தவமுடையேன், இனிப்போய்ஒருவன்
தனக்குப்பணிந்து * கடைத்தலைநிற்கை நின்சாயையழிவுகண்டாய் *
புனத்தினைகிள்ளிப்புதுவவிகாட்டி உன்பொன்னடிவாழ்கவென்று *
இனக்குறவர்புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலையெந்தாய்! (3)

காதம்பலவும்திரிந்துழன்றேற்கு அங்கோர்நிழலில்லைநீருமில்லை * உன்
பாதநிழலல்லால்மற்றோருயிர்ப்பிடம் நான்எங்கும்காண்கின்றிலேன் *
தூதுசென்றாய்! குருபாண்டவர்க்காய் அங்கோர்பொய்ச்சுற்றம்பேசிச்சென்று
பேதஞ்செய்துஎங்கும்பிணம்படுத்தாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்! (4)

காலுமெழாகண்ணநீரும்நில்லா உடல்சோர்ந்துநடுங்கி * குரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறா எனதோள்களும்வீழ்வொழியா *
மாலுகளாநிற்கும்என்மனனே! உன்னைவாழ்த்தலைப்பெய்திட்டேன் *
சேலுகளாநிற்கும்நீள்சுனைசூழ் திருமாலிருஞ்சோலையெந்தாய்! (5)

எருத்துக்கொடியுடையானும் பிரமனும்எந்திரனும் * மற்றும்
ஒருத்தரும்இப்பிறவியென்னும்நோய்க்கு மருந்தறிவாருமில்லை *
மருத்துவனாய்நின்றமாமணிவண்ணா! மறுபிறவிதவிரத்
திருத்தி * உன்கோயில்கடைப்புசுப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய்! (6)

அக்கரையென்னுமனத்தக்கடலுள்அழுந்தி உன்பேரருளால் *
இக்கரையேறியிளைத்திருந்தேனை அஞ்சேலென்றுகைகவியாய் *
சக்கரமும்தடக்கைகளும் கண்களும்பீதகவாடையொடும் *
செக்கர்நிறத்துச்சிவப்புடையாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்! (7)

எத்தனைகாலமும்எத்தனையூழியும் இன்றொடுநாளையென்றே *
இத்தனைகாலமும்போய்க்கிறிப்பட்டேன் இனிஉன்னைப்போகலொட்டேன் *
மைத்துனன்மார்களைவாழ்வித்து மாற்றலர்நூற்றுவரைக்கெடுத்தாய்!
சித்தம்நின்பாலதறிதியன்றே திருமாலிருஞ்சோலையெந்தாய்! (8)

அன்றுவயிற்றில்கிடந்திருந்தே அடிமைசெய்யலுற்றிருப்பன் *
இன்றுவந்துஇங்குஉன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்டே?
சென்றங்குவாணனை ஆயிரந்தோளும் திருச்சக்கரமதனால் *
தென்றித்திசைதிசைவீழ்ச்செற்றாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்! (9)

* சென்றுலகம்குடைந்தாடும்கனைத் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் * அடிமல்அடிமைத்திறம் நேர்படவிண்ணப்பஞ்செய் *
பொந்திகழ்மாடம்பொலிந்துதோன்றும் புதுவைக்கோன்விட்டுசித்தன் *
ஒன்றினோடொன்பதும்பாடவல்லார் உலகமளந்தாந்தமரே. (10)

அடிவரவு: துக்கச்சுழலையை வளைத்து உனக்கு காதம் காலும் எருத்து அக்கரை எத்தனை அன்று சென்று சென்னி.